**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender : | | Miscellaneous : | |
| Preliminary Register : | | Case No. : | **S.C.52/2023** |
| Sessions : | | | |

| | | |
|---|---|---|
| Deposition of witness for : | Prosecution : | **P.W. 1** |
| | Defence : | **D.W.** |
| | Court : | **C.W.** |

| | | | |
|---|---|---|---|
| **Name :** | வாசுகி | **S/o.(or)W/o. :** | |
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **24.10.2025**

**எதிரிகள் ஆஜரில்லை. பிடிக்கட்டளை நிலுவை.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது சென்னை வண்டலூர் ஊனமாஞ்சேரியில் உள்ள தமிழ்நாடு காவல் உயர்பயிற்சியகத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.12.2014ம் தேதி பெரம்பலூர் மதுவிலக்கு அமலாக்கபிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தபோது காவல்ஆய்வாளர் பெரியண்ணன், குற்றப்பிரிவு பொறுப்பு மனுவிலக்கு அமலாக்கபிரிவு அவர்கள் தலைமையில் சிறப்பு உதவியாளர் செல்வராஜ் மற்றும் காவலர்களுடன் 18.00 மணிக்கு தண்ணீர் பந்தல் அருகில் வாகன தணிக்கை செய்துகொண்டிருந்தபோது சென்னையில் இருந்து திருச்சியை நோக்கி வடக்கிலிருந்து தெற்காக வந்துகொண்டிருந்த TN 42 Y 3458 எண் கொண்ட அப்பாச்சி இருசக்கர வாகனத்தை நிறுத்தி விசாரித்தபோது வாகனத்தின் ஓட்டுனர் முன்னுக்குபின் முரணாக பெயர், விலாசம் சொன்னதின் பேரில் அவர் வைத்திருந்த கட்டப்பையை பரிசோதனை செய்தபோது அதில் 10 Green Magic பிராந்தி அயல் மாநிலத்தை சேர்ந்த பிராந்தியை வைத்திருந்தார். அதன்பின்னர் அவரை

விசாரித்த போது அவர் ஆர்.எஸ் மகால் அருகே பாட்ஷா லேத் ஒர்க்ஸ் அவரும் மற்றும் அவருடன் சேர்ந்த சில நபரும் சேர்ந்து போலி மதுபானங்களை தயாரித்து வெளிமாநிலங்களுக்கு கடத்துவதாக தெரிவித்தார். அவர் தனது பெயர் வெற்றிவேல் த/பெ. சரவணன் மேற்கு மாம்பலம், சரோஜினி நகர், சென்னை என்று கூறினார். மேற்படி நபரை காரணம் கூறி 19.30 மணிக்கு கைது செய்து பொது மக்கள் யாரும் இல்லாததால் 10பாட்டில்களை மகசரில் காவல் ஆய்வாளர் கைப்பற்றினார். பரிசோதனைக்காக 500மிலி 2 பாட்டில்களில் எடுத்து SHO சீல் வைக்கப்பட்டது. அதற்கு உதவியாக நானும், சிறப்பு உதவிஆய்வாளர் செல்வராஜ் ஆகியோர் இருந்தோம். அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சியாக கையெழுத்து செய்தோம். அதன்பிறகு அவர் பாட்ஷா லேத்ஷாப்பில் போலியான மதுபாட்டில்கள் விற்பதாகவும், அதை தயாரிப்பற்கு உரிய பொருட்கள் இருப்பதாக கூறியதன் பேரில் பொதுமக்கள் யாரும் இல்லாததால் காவல்ஆய்வாளர் அவர்கள் கிராம நிர்வாக அலுவலகர் வாலிகண்டபுரம் பழனிசாமி அவர்கள் மற்றும் கிராம உதவியாளர் பெரியசாமி, ஆகியோர்களை நேரில் சென்று சாட்சியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டதின்பேரில் அவர்களுடன் பாட்ஷா லேத்ஷாப்பில் சென்று வெற்றிவேல் தனக்கு போலிமதுபானங்களை தயார் செய்ய உதவியாக இருந்த நபர்களை அடையாளம் காண்பித்தார். அவர்கள் 1.செல்வம், 2. ஆதி, 3, மணி, 4. மாணிக்கம்,, 5. ரகு, 6, சந்தோஷ், 7, விஸ்வநாதன், 8, விஜி, 9, சுரேஷ், அவர்களை காரணம் கூறி 22.00 மணிக்கு காவல்ஆய்வாளர் கைதுசெய்தார். அவர்களை செல்வம் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 22.00 மணிமுதல் 23.00 மணி வரை ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிகள் பழனிசாமி, பெரியசாமி ஆகியோர்கள் முன்னிலையில் பெற்றார். அதன்பிறகு அவர் போலியாக மனுபானங்கள் தயாரித்து வைத்திருப்பதையும் அதற்கு பயன்படுத்திய மதுபானங்களையும், அது வைத்திருந்த வாகனங்களையும் அடையாளம் காட்டினார். அந்த மதுபானங்களை காவல்ஆய்வாளர் முகர்ந்து பார்க்க அதிக நெடிஉடனும், வாந்தி, மயக்கத்தை ஏற்படுத்துவதாகவும் இருந்தது. அதில் ஒன்று ஈச்சர் வாகனம் வாகன எண் TN 28 AQ 4347ல் 35லிட்டர்

பிடிக்கக்கூடிய 80 வெள்ளைநிற கேன்களில் திரவம் இருந்தது. 300 காலி கேன்கள் இருந்தது. 23.00 மணியிலிருந்து 23.30 மணிவரை கைப்பற்றப்பட்டது. அதில் 650மிலி பிடிக்கக்கூடிய இரண்டு பாட்டில்களில் 500மி.லி மாதிரிக்காக ரசாயன பரிசோதனைக்காக எடுக்கப்பட்டது. அதை மகசரில் கைப்பற்றப்பட்டது. அதன்பின்பு 23.30 மணியிலிருந்து 24.00 மணிவரை TN 32 F 1064 என்ற ஈச்சர் வாகனத்தில் இருந்த 35லிட்டர் பிடிக்கக்கூடிய 80 வெள்ளைநிற ரசாயன திரவம் இருந்த கேன்களையும், 300 காலி கேன்களையும் காவல்ஆய்வாளர் கைப்பற்றினார். TN 58 AA 4523 என்ற ஈச்சர் வாகனத்தில் இருந்த 35லிட்டர் பிடிக்கக்கூடிய 57 வெள்ளைநிற ரசாயன திரவம் இருந்த கேன்களையும், 200 காலி கேன்களையும் காவல்ஆய்வாளர் கைப்பற்றினார். அதன்பின்பு 00.30 முதல் 01.00 வரை மற்றொரு ஈச்சர் வாகனத்தில் இருந்த சுமார் 40 அட்டைபெட்டிகளில் ஒரு பெட்டிக்கு 12 பாட்டில்கள் வீதம் 750 மி.லி கொண்ட Green Magic பிராந்தி காவல்ஆய்வாளர் கைப்பற்றினார். அதன்பின்னர் 01.30 மணியிலிருந்து 02.00 மணிவரை மற்றொரு ஈச்சர் வாகனத்தில் இருந்த 50 அட்டைபெட்டிகள் ஒருபெட்டிக்கு 12 பாட்டில்கள் வீதம் Green Magic பிராந்திகளை காவல்ஆய்வாளர் கைப்பற்றினார். அதில் ஒருபாட்டிலை ஆய்வுக்காக மகசரில் கைப்பற்றினார். 02.00 மணிமுதல் 02.30 மணிவரை மற்றொரு ஈச்சர் வாகனத்தில் இருந்த 10 அட்டைபெட்டிகள் ஒரு பெட்டிக்கு 42 பாட்டில்கள் வீதம் Green Magic 180மி.லி பிராந்தி பாட்டில்கள் காவல்ஆய்வாளர் கைப்பற்றினார். அதன்பிறகு 02.30 மணிமுதல் 03.00 மணிவரை டாடா சுமோ TN 48 K4721 என்ற வாகனத்தில் 180மி.லி 5 அட்டைபெட்டிகள் ஒருபெட்டிக்கு 42 பாட்டில்கள் வீதம் Green Magic 180மி.லி பிராந்திகளை காவல்ஆய்வாளர் கைப்பற்றினார். 03.00 மணிமுதல் 03.30 மணிவரை மற்றொரு பொலிரோ TN 48 A2304 என்ற வாகனத்தில் இருந்த 10அட்டைபெட்டிகளில் 12பாட்டில்கள் 750மி.லி அளவு கொண்டதை காவல்ஆய்வாளர் கைப்பற்றினார். அதன்பின்னர் மேற்படி போலி மதுபானங்களை தயாரிக்க பயன்படுத்திய பொருட்களை

கைப்பற்றுவதற்கு பாட்ஷா லேத்ஷாப்பில் மேற்கு மூலையில் கீற்று கொட்டாயில் கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர்அவர்களுக்கு காவல்ஆய்வாளர் சோதனை இடுவதற்காக வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுமதி பெறப்பட்டது. செல்வம் என்பவர் லேத்ஷாப்பில் கீற்று கொட்டாயில் உள் இருந்த போலிமதுபானங்களை தயாரிக்க பயன்படுத்திய லேபிள்கள், மிக்சிங்மிசின், பலூன் மற்றும் இருசக்கர வாகனம் பஜாஜ் சிடி 100, ஹோண்டா சைன், டேங்கர் லாரி ஆகியவற்றை 04.00 மணிமுதல் 06.00 மணிவரை காவல்ஆய்வாளர் கைப்பற்றினார். அதன்பின்னர் அங்கு வந்த சையது பாட்ஷா என்பவரை செல்வம் அடையாளம் காட்டினார். அவரை காரணம்கூறி காவல்ஆய்வாளர் 06.15மணிக்கு கைதுசெய்தார். அவரிடமிருந்து ஒப்பந்த பத்திரம் ஒன்று கைப்பற்றப்பட்டது. அந்த பத்திரம் 25.02.2014ம் தேதியில் தயாரிக்கப்பட்டது. அதில் திருச்சி கருமண்டபத்தை சேர்ந்த சுரேஷ்குமார் என்பவருக்கும், வேப்பந்தட்டையை சேர்ந்த சையதுபாட்ஷா என்பவருக்கும் சொந்தமான 31சென்ட் இடம் சர்வே எண்.363/28 வாலிகண்டபுரம் அருகில் இருந்தது. அதில் ரூ.2லட்சம் முன்பணமாகவும், ரூ.22ஆயிரம் வாடகை தருவதாக ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. மேற்படி எதிரிகளையும் வழக்கின் சொத்துக்களையும் கைப்பற்றி 09.00 மணிக்கு நிலையம் வந்து எதிரிகளை திரேகபரிசோதனை செய்து நிலையம்பாரா வசம் ஒப்படைக்கப்பட்டது. மதுவிலக்கு அமலாக்க குற்ற எண்.830/2014 சட்டப்பிரிவு 4(1)(aaa) r/w 4(1–A) TNP Act மற்றும் 4, 6, 7 TNRS Rules 2000 மற்றும் 328, 420,468,471 இதச படி வழக்கு பதிவுசெய்ய காவல்ஆய்வாளர் நானும், சிறப்பு ஆய்வாளரும் உதவியாக இருந்தோம். காவல் ஆய்வாளர் இதுசம்மந்தமாக என்னை விசாரித்தார்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**</u>

வாகனதணிக்கைக்காக காவல்நிலையத்திலிருந்த 18.00 மணிக்கு புறப்பட்டோம். அப்போது காவல்ஆய்வாளர் பெரியண்ணன், சிறப்பு உதவிஆய்வாளர் செல்வராஜ் மற்றும் காவலர்களுடன் புறப்பட்டோம். ஆய்வாளர் விசாரணையின் போது நான் உடன்வந்த காவலர்களின் பெயர் மற்றும் எண் குறிப்பிட்டு சொல்லவில்லை

என்றால் சரிதான். நான் பாக்கெட் டைரி பராமரிப்பது உண்டு. அதில் என்னுடைய அன்றாட பணிகள் குறித்த விவரம் குறிப்பிட்டிருக்கும் என்றால் சரிதான். ஆய்வாளர் விசாரணையின் போது என்னுடைய பாக்கெட்டைரியை அவரிடம் ஒப்படைக்கவில்லை. நான் முதல்விசாரணையில் சொன்னதேதியில் நான் பணியில் இல்லையென்றால் சரியல்ல. தண்ணீர்பந்தல் பகுதியில் தான் வட்டார போக்குவரத்து அலுவலகம் உள்ளது என்றால் சரிதான். தண்ணீர்பந்தல் கிராமம் சுமார் 2 கி.மீ தூரம் நீளவாக்கில் உள்ளது என்றால் சரிதான். தண்ணீர்பந்தல் கிராமத்தில் இரண்டுபக்கமும் வீடுகள், கடைகள், பேருந்துநிறுத்தம் மற்றும் கல்லூரி உள்ளது என்றால் சரிதான். தண்ணீர்பந்தலில் எந்த இடத்தில் வாகனதணிக்கை செய்தோம் என்று நான் குறிப்பிட்டு முதல்விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். தண்ணீர்பந்தலில் பகுதியில் தேசியநெடுஞ்சாலை தென்வடலாக நேராக செல்கிறது என்றால் சரிதான். வாகனதணிக்கை செய்தபோது நான் சீருடையில் இல்லை. ஆய்வாளர் சீருடையில் இருந்தார். நாங்கள் நின்றஇடத்தை வாகனஓட்டிகள் சுமார் 300, 400 மீட்டர் தூரத்தில் வரும்போது பார்க்கமுடியும் என்றால் சரிதான். அதேபோன்று வாகனஓட்டிகள் வருவதையும் நாங்கள் பார்க்கமுடியும் என்றால் சரிதான். ஆய்வாளர் தனிநபர் சாட்சிகளாக 7, 8 நபர்களை அழைத்தார். அவர்கள் முன்வரவில்லை. அந்த முன்வராத நபர்களின் பெயர், விலாசத்தை ஆய்வாளர் வாங்கிகொண்டாரா என்று எனக்கு ஞாபகமில்லை. மகசர், ஒப்புதல்வாக்குமூலம் மற்றும் சாட்சிகளின் வாக்குமூலங்களை ஆய்வாளர் கைப்பட எழுதினாரா என்றால் எழுதினார். வாக்குமூலம் டைப் செய்யப்பட்டது. வாக்குமூலத்தை லேப்டாப்பில் ஆய்வாளர் பதிவுசெய்தார். என்னுடைய விசாரணை வாக்குமூலத்தில் கணினி காவலர் மூலம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டு நகல் எடுத்து படித்து காண்பிக்கபட்டதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். நகல் அங்கேயே கடையில் இருந்து எடுக்கப்பட்டது. நகல்எடுத்த கடைக்காரரை ஆய்வாளர் சாட்சியாக விசாரித்தாரா என்று எனக்கு தெரியாது. நான்

முதல்விசாரணையில் சொன்ன நாளில், நேரத்தில், இடத்தில் எந்த எதிரியையும் கைதுசெய்யவில்லை என்றும், அவர்கள் ஒப்புதல்வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றும், அதன்அடிப்படையில் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்தவழக்கின் புகார்தாரர் மற்றும் முதல் புலன்விசாரணை அதிகாரி என்னுடைய உயர் அதிகாரி என்றால் சரிதான். என்னுடைய உயர்அதிகாரி சொன்னதின்பேரில் அவர் வேண்டுகோளுக்கிணங்க அவர் பதிவு செய்த பொய்யான வழக்கிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துகள் அனைத்தும் வெவ்வேறு வழக்குகளில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை வைத்து எதிரிகள் மீது தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகைக்கு ஆதராவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சோதனை ஜாபிதாவை 14.12.2014ம் தேதி கொடுத்தார். இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட 8 வாகனங்கள் லேத்ஷாப் வளாகத்துக்குள் இருந்தது. என்னுடைய விசாரணை வாக்குமூலத்தில் எந்த வாகனம், எந்த திசையில் இருந்தது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். கிராமநிர்வாகஅலுவலர் பழனிசாமியை நேரடியாக ஆய்வாளர் அழைத்தார். எத்தனை மணிக்கு என்று எனக்கு ஞாபகமில்லை. இந்த வழக்கு சம்பவத்துக்கும், எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. உயர்அதிகாரி புள்ளி விவர கணக்கிற்காக பதிவு செய்த வழக்கிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. லேத்ஷாப்பில் நான் கூறுவது போன்று ஒரே நேரத்தில் 8 வாகனங்களை நிறுத்துவதற்கு இடவசதி இல்லையென்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால்சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u>: இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.